INSTITUTE FOR HEALTH POLICY

72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி: 20 April 2023
நேரம்: 12:01 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**


மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at' ihp.lk Twitter: @ravirannaneliya

# நடைபெறக்கூடிய ஜனாதிபதி தேர்தலில் அ. கு. திஸாநாயக்க (48%) சஜித் பிரேமதாசவைவிட(37%) முன்னிலையில் உள்ளார்

*IHP மார்ச் 2023 ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம் புதுப்பிப்பு*

IHPன் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின் (SLOTS) ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மான MRP தொடரியின் முதல் வெளியீட்டின்படி, 2023 மார்ச்சில், 48% வாக்களிக்ககூடியவர்களுடன் என்.பி.பி./ஜே.வி.பி. யின் தலைவர் அ கு திஸ்ஸநாயக, 37% உடைய எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாசவைவிட முன்னிலையில் உள்ளார். 11% உடைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் 4% உடைய பொதுவான எஸ்.எல்.பி.பி. வேட்பாளரைவிடவும் இவர்கள் இருவரும் பெரும் வாக்கு வித்தியாசத்துடன் முன்னிலையில் உள்ளனர். மதிப்பீடுகளின் பிழை விளிம்பு 1-5%.

**ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம், மார்ச் 2023**
**(அநேகமாக வாக்களிக்கக்கூடியவர்கள் %)**
இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால், நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?





**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**
மார் 2023 இல் நடத்தப்பட்ட 521 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ். 31 2021- ஏப்ர. 9 2023 வரை நடத்தப்பட்ட 10,601 மொத்த நேர்காணல்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டன. MRP மாதிரி கொண்டு மதிப்பீடுகள் கணிக்கப்பட்டன மேலும் மதிப்பீடுகளிற்கான பிழை விளிம்பு 1-5% என்று மதிப்பிடப்பட்டது. முதலில் எஸ்.எல்.பி.பி. என்பது "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ" வை குறிப்பிட்டது, ஆனால் இப்பொழுது பதிலளிப்பவர்கள் பொதுவான எஸ்.எல்.பி.பி. வேட்பாளர் பற்றி கேட்கப்படுகிறார்கள்.

IHP INSTITUTE FOR HEALTH POLICY

தெரிவிக்கப்பட்ட வாக்காளர் விருப்பின் அடிப்படையில், மார்ச் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நடந்திருந்தால் அ. கு. திஸாநாயக்க அநேகமாக வெற்றி பெற்றிருக்கலாம். ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெருவதற்கு தேவையான 50% விட குறைவாக அவருக்கு ஆதரவு இருந்தாலும், அவரை மேலே கொண்டு செல்லும் அளவிற்கு ரணில் விக்ரமசிங்க மற்றும் எஸ்.எல்.பி.பி. வாக்காளர்களிடையே இரண்டாவது விருப்பத்தேர்வாக அவர் போதுமான அளவு வாக்குகளை பெற்றிருக்கலாம்.

**IHP SLOTS ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம் தொடரி**
**(அநேகமாக வாக்களிக்கக்கூடியவர்கள் %)**
இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால், நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**
ஆகஸ். 31 2021- ஏப்ர. 9 2023 வரை நடத்தப்பட்ட 10,601 மொத்த நேர்காணல்களின் அடிப்படையில் மாதாந்திர மதிப்பீடுகள். MRP மாதிரி கொண்டு மதிப்பீடுகள் கணிக்கப்பட்டன மேலும் மாதம் மற்றும் கட்சியைப் பொருத்து மதிப்பீடுகளின் பிழை விளிம்பு 1-7% என்று மதிப்பிடப்பட்டது. முதலில் எஸ்.எல்.பி.பி. என்பது "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ" வை குறிப்பிட்டது, ஆனால் இப்பொழுது பதிலளிப்பவர்கள் பொதுவான எஸ்.எல்.பி.பி. வேட்பாளர் பற்றி கேட்கப்படுகிறார்கள்.

IHP INSTITUTE FOR HEALTH POLICY

நடந்திருக்கக்கூடிய ஜனாதிபதி தேர்தலில் வாக்காளரிடையே ரணில் விக்ரமசிங்கவிற்கான ஆதரவு 2022 நடுவில் ஒரு உயர்வைப் பெற்றிருந்தாலும் 2023 ஆரம்பத்தில் தேன்நிலவு முடிந்து இந்த ஆதரவு கரைந்தது. ஆனால், சமீபத்திய மார்ச் மாத கருத்துக்கணிப்பில் அவர் 3% அதிகரிப்பு பெற்றார். இது வாக்களரிடையே உத்தேச வேட்பாளர் விக்ரமசிங்கவிற்கான  அதரவு அதிகரிக்க வாய்ப்பு இருப்பதை காட்டுகின்றது. இருப்பினும், இவர் முன்னணியில் இருக்கும் இரு தலைவர்களுக்கு தொடர்ந்து பின் தங்கியுள்ளார்.

பட்டியலில் நான்கு வேட்பாளர்களை மட்டுமே தருகின்றது. "புது வேட்பாளர்களின் நுழைவு அல்லது சில கட்சிகள் கூட்டணி அமைத்தல் மாறுபட்ட முடிவுகளை தரலாம்" என்று SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மற்றும் IHPன் நிர்வாகப் பணிப்பாளருமான வைத்தியர் ரன்னன்-எலிய கருத்து தெரிவித்தார். மேலும் "எஸ்.ஜே.பி. - யூ.என்.பி. கூட்டணி எஸ்.எல்.பி.பி. – யூ.என்.பி. கூட்டணியைவிட அதிக வாக்குகளை பெற வாய்ப்புண்டு எனும் அதே சமயத்தில், இவர்கள் என்.பி.பி./ஜே.வி.பி.க்கு பல வாக்காளர்களை இழக்கலாம். எஸ்.ஜே.பி. வாக்காளர்களின் கருத்துக்கள் எஸ்.எல்.பி.பி. மற்றும் யூ.என்.பி. வாக்காளர்களை விட என்.பி.பி./ஜே.வி.பி.க்கு நெருக்கமாக இருப்பதே இதற்கு காரணமாகும். " என்று அவர் கூறினார்.

முழு அறிக்கை ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, April 2023, "IHP Presidential Election Voting Intentions Update March 2023: AK Dissanayake (48%) leads Sajith Premadasa (37%) in Presidential Election voter preferences" *Available at* *https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202309.pdf*

முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, February 2023, "IHP MRP Voting Intentions Update February 2023: Voters consolidate around the NPP/JVP, SJB and ITAK, with NPP/JVP taking a clear lead", SLOTS Report #2023-06. Available at *http://ihp.lk/publications/docs/SLOTSReport202306.pdf*

Institute for Health Policy, March 2023, "Public continue to hold deeply unfavourable views of almost all politicians across all parties" Available at*:* *https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202307.pdf*

**IHP பற்றி**

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட்

பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

**முறை**

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஓர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்கானல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression and Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்தது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மையை மதிப்பிட, multiple imputation என்னும் தரவு கணிப்புமுறையை பயன்படுத்துவதோடு, குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பதை மதிப்பீடு செய்ய அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்துகிறது. இம்பியூடேஷன் (Imputation) என்பது தவறிய, தவறான அல்லது சீரற்ற தரவுகளுக்கு மாற்று மதிப்புகளை ஒதுக்கப் பயன்படும் செயல்முறையாகும்.

2023 மார்ச் மாதத்திற்கான MRP மதிப்பீடுகள் மார்ச் 2023 ல் நடத்தப்பட்ட 521 நேர்காணல்கள் மற்றும்  ஆகஸ்ட் 31 2021 - ஏப்ரல் 9 2023 வரை நடத்தப்ட்ட 10,601 நேர்காணல்களின் மொத்தத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. பிழை விளிம்பு அ. கு. திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாசவிற்கு 4–5% என்றும் மற்ற இரண்டு உத்தேச வேட்பாளர்களுக்கும் 1–3% என்றும் மதிப்பிடப்பட்டது.

MRP என்பது மற்ற நாடுகளில் உள்ள வாக்கெடுப்பு நிறுவனங்களால் சிறிய கூறுகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு அதிகமாக உபயோகப்படுத்தப்படும் ஒரு முறையாகும். குறிப்பாக YouGov, UK Brexit வாக்கெடுப்பு மற்றும் சமீபத்திய UK பொதுத் தேர்தல்களின் முடிவுகளை முன்னறிவிக்கப் பயன்படுத்தியது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, பொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR) ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும்

விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.